***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***CC.No. 67/2025 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | செந்தில் சுசிலா |
| *Father/Husband's Name* | க/பெ. கதிரவன் |
| *Village* | கோட்டூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 50 |

**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 09.04.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நன்னிலம் நீதிமன்றத்தில் துணை நாசராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியான வடிவேல் என்பவரை எனக்கு தெரியும்.

கடந்த 22.04.2024 ம் தேதியன்று மாலை 04.30 மணியளவில் நான் மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1ல் பெஞ்ச் கிளார்க்காக திறந்தவெளி நீதிமன்றத்தில் பணியாற்றி கொண்டிருந்தபோது எதிரி வடிவேல் நீதிமன்றத்திற்குள் வந்து அலுவலக உதவியாளர் விஜயலெட்சுமி மற்றும் நகல் எடுப்பவர் உ. ரூத்மேகி ஆகியோரிடமும் காசு கொடு காசு கொடு என்று கேட்டார். நான் அவரிடம் காசுயெல்லாம் வெளியே போங்க என்று கூறினேன். அப்போது எதிரி என்னை பார்த்து உன்னை பார்த்தால் முத்தம் கொடுக்கனும்போல் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு எனது அருகில் வந்தார். மேலும், அசிங்கமாக திட்டினார். இதுபோன்று அடிக்கடி வார இறுதிநாட்களில் நீதிமன்ற ஊழியர்கள் turn duty செய்யும் போது இதுபோன்று தகராறு செய்திருக்கிறார். நான் உடனடியாக போலீசாருக்கு போன் செய்ய போகிறேன் என்று எனது தொலைபேசியை எடுத்தவுடன் இங்கிருந்து சென்றுவிட்டார். சம்பவம் தொடர்பாக அன்றைதினமே

மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் மாண்பமை நீதித்துறை நடுவர் எண்.1(முசுகூபொ) மூலம் உரிய வழி மூலமாக புகார் மனு அளித்தேன்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவ காலத்தில் மன்னார்குடி நகர காவல் நிலையம் நான் பணியாற்றிய நீதிமன்றத்தில் இருந்து 100, 150 மீட்டர் தொலைவில் தான் இருந்தது என்றால் சரிதான். அதனால் நான் சம்பவ நாள் அன்றே புகார் கொடுத்துவிட்டேன். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் தேதி 22.04.2024 மாலை 04.00 மணிக்கு நடந்தது. ஐயா ஒப்புதலுடன் மறுநாள் 23.04.2024 ம் தேதியன்று தான் புகாரானது காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சம்பவ நடந்ததாக சொல்லப்படும் 22.04.2024 ம் தேதியன்றே நான் முதல் விசாரணையில் சொன்னது போன்று ஒரு புகார் கொடுத்தேன் என்றும், அது இந்த வழக்கிற்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதால் அது என்னால் மறைக்கப்பட்டு 23.04.2024 ம் தேதியிட்ட இந்த புகார் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

இந்நீதிமன்றத்திற்கு காவல் நிலைய காவலர்களாக நீதிமன்ற சரகத்திற்கு உட்பட்ட 4 முதல் 5 நபர்கள் அலுவல் பணிக்கு வருவார்கள் என்றால் சரிதான். அவர்களது அலுவல் நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணி வரை ஆகும். அதே போல் வழக்கறிஞர்கள், வழக்காடிகள் ஏறத்தாழ சுமார் 10, 20 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் Judge இல்லாமல் இருந்ததால் யாரும் இல்லை. நாங்கள் மட்டும் தான் இருந்தோம். அன்றைய நாளிற்கான அலுவல் பணி முடிந்துவிட்டமையால் கூட்டம் எதுவும் இல்லை.

சம்பவ நாள் அன்று சம்பவத்திற்கு பிறகும் தொடர்ந்து எனது அலுவல் பணியை மேற்கொண்டு தான் வந்தேன். நீதிமன்றத்தை சுற்றி CCTV கேமரா உள்ளது. அதில் காட்சி பதிவேடு இருக்கும். போலீசார் விசாரணையில் CCTV கேமரா பதிவிற்கான பதிவுகள் உள்ளது என்பதை சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. விசாணைக்கு தேவைப்பட்டால் நீதிமன்ற காட்சிகளை காவல் நிலையத்தில் சமர்பித்திருக்க முடியுமா என்றால் இல்லை.

முதல் விசாரணையில் சொன்னது போன்று turn duty ல் என்னையும் எனது அலுவலக ஊழியர்களையும் தொந்தரவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அதுபோன்று எதாவது சம்பவங்கள் நடைபெற்றிருந்தால் அப்போதே புகார் கொடுத்திருப்போம் என்றும் தற்போது உண்மை நிலையை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முதல் விசாரணையில் நான் சொன்னது போன்று எதிரி முத்தம் கொடுகக வேண்டும் என்று அருகில் நடந்து வந்ததாக போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி எந்த தருணத்திலும், முத்தம் கொடுக்க வேண்டும் என்று கூறிவிட்டு வரவில்லை என்றும், என்னால் வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ நாள் அன்றும், எதிரி பிடிக்கட்டளையை ரத்து செய்ய காலதாமதமாக மதியம் நீதிமன்றத்திற்கு வந்தார் என்றும், அதில் எனக்கும், அவருக்கும் ஏற்பட்ட வார்த்தை பிரோயகத்தை மறைத்து தவறான வழக்கை தாக்கல் செய்து தவறான முறையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

**_DEPOSITION OF WITNESS_**
**_(Chapter XXV BNSS)_**

**_IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT_**
**_Mannargudi_**
**_CC.No. 67/2025 – P.W.2 (LW2)_**

| | |
|---|---|
| *Name* | விஜயலெட்சுமி |
| *Father/Husband's Name* | க/பெ. சரவணன் |
| *Village* | மேலவாசல் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 33 |

**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 09.04.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியான வடிவேல் என்பவரை எனக்கு தெரியும்.

கடந்த 22.04.2024 ம் தேதியன்று மாலை 04.30 மணியளவில் நான் மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1ல் திறந்தவெளி நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக பணியாற்றி கொண்டிருந்தபோது அசா.1 பெஞ்ச் கிளார்க் பணியிடத்தில் அமர்ந்திருந்தார். அப்போது எதிரி வடிவேல் நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்து ஊழியர்களிடம் பைசா கேட்டுக்கொண்டிருந்தார். அப்போது நீதிமன்றத்திற்குள் வந்து என்னிடமும் மற்றும் நகல் எடுப்பவர் உ. ரூத்மேகி ஆகியோரிடமும் காசு கொடு காசு கொடு என்று கேட்டார். நான் அவரிடம் காசுயெல்லாம் வெளியே போங்க என்று கூறினேன். அப்போது எதிரி நீதிமன்றத்திற்குள் வந்து அசா.1ஐ பார்த்து உன்னை பார்த்தால் முத்தம் கொடுக்கனும்போல் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு அசா.1ன் அருகில்

வந்தார். மேலும், அசிங்கமாக திட்டினார். இதுபோன்று அடிக்கடி வார இறுதிநாட்களில் நீதிமன்ற ஊழியர்கள் turn duty செய்யும் போது இதுபோன்று தகராறு செய்திருக்கிறார். அசா.1 உடனடியாக போலீசாருக்கு போன் செய்ய போகிறேன் என்று அசா.1 தொலைபேசியை எடுத்தவுடன் இங்கிருந்து சென்றுவிட்டார். சம்பவம் தொடர்பாக அன்றைதினமே மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் மாண்பமை நீதித்துறை நடுவர் எண்.1(முகூபொ) மூலம் உரிய வழி மூலமாக புகார் மனு அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன். சம்பவ நாள் அன்று சம்பவத்தை பற்றி பொறுப்பு நீதிபதியிடம் சொன்னோம். காவல் நிலையத்திற்கு சம்பவ நாளன்றே காவல் நிலையத்திற்கு மாலை 05.30 மணிக்கெல்லாம் நான், செந்தில்சுசிலா மேடம் சென்றோம். சம்பவம் குறித்து செந்தில் சுசிலா மேடம் மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். சம்பவ காலத்தில் பொறுப்பு நீதிபதி இருந்ததால் அலுவலக வேலைகள் மதியம் 2,3 க்கெல்லாம் முடிந்துவிட்டது என்றால் இல்லை.

பொறுப்பு நீதிபதி இருந்தபோது இந்நீதிமன்றத்தில் நீதிபதி அமர்வு இல்லாதபோது நான் திறந்தவெளி நீதிமன்றத்தில் Printer அருகில் வேலை பார்த்துக்கொண்டு தான் இருந்தேன். அன்றை பணி என்ன பணி என்று தற்சமயம் ஞாபகம் இல்லை. எல்லா வேலைகளும் செய்வேன். அலுவலக அறை என்பது திறந்தவெளி நீதிமன்றத்திற்கு மேல்புறத்தில் உள்ளது என்றால் சரிதான். அமர்வு இல்லாத நேரத்தில் அலுவலகத்தில் வைத்து தான் பணி செய்யப்படும் என்றால் சரியல்ல. அசா.1 பெஞ்ச் கிளார் என்பதால் அவருக்கு கீழ் OA ஆக பணியாற்றுவதால் அவருக்கு ஆதரவாக இந்த எதிரியை தொடர்புபடுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த தருணத்திலும் அசா1ஐ ஆபாசமாக பேசவில்லை என்றும், முத்தம் கொடுக்க வேண்டும் என்று அருகில் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***CC.No. 67/2025 – P.W.3 (LW3)***

| | |
|---|---|
| *Name* | ரூத்மேகி |
| *Father/Husband's Name* | க/பெ. சந்தோஷ் |
| *Village* | பேரளம் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *33* |

**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 09.04.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நீதிமன்றத்தில் நகல் எடுப்பவராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியான வடிவேல் என்பவரை எனக்கு தெரியும்.

கடந்த 22.04.2024 ம் தேதியன்று மாலை 04.30 மணியளவில் நான் மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ல் திறந்தவெளி நீதிமன்றத்தில் பதிவேடுகளை எழுதி கொண்டிருந்தபோது அசா.1 பெஞ்ச் கிளார்க் பணியிடத்தில் அமர்ந்திருந்தார். அப்போது எதிரி வடிவேல் நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்து ஊழியர்களிடம் பைசா கேட்டுக்கொண்டிருந்தார். அப்போது நீதிமன்றத்திற்குள் வந்து என்னிடமும் மற்றும் நகல் எடுப்பவர் உ. ரூத்மேகி ஆகியோரிடமும் காசு கொடு காசு கொடு என்று கேட்டார். நான் அவரிடம் காசுயெல்லாம் வெளியே போங்க என்று கூறினேன். அப்போது எதிரி நீதிமன்றத்திற்குள் வந்து அசா.1ஐ பார்த்து உன்னை பார்த்தால் முத்தம் கொடுக்கனும்போல் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு அசா.1ன் அருகில் வந்தார். மேலும், அசிங்கமாக திட்டினார். மிரட்டினார். இதுபோன்று அடிக்கடி வார இறுதிநாட்களில் நீதிமன்ற ஊழியர்கள் turn duty செய்யும் போது இதுபோன்று தகராறு செய்திருக்கிறார். அசா.1 உடனடியாக போலீசாருக்கு போன்

செய்ய போகிறேன் என்று அசா.1 தொலைபேசியை எடுத்தவுடன் இங்கிருந்து சென்றுவிட்டார். சம்பவம் தொடர்பாக அன்றைதினமே மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் மாண்பமை நீதித்துறை நடுவர் எண்.1(முகூபொ) மூலம் உரிய வழி மூலமாக புகார் மனு அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவ காலத்தில் எனது பணி நிலை என்ன என்றால்Xerox operator. நீதிமன்ற அலுவலகம் திறந்தவெளி நீதிமன்றத்தில் இருந்து மேல் புறத்தில்தான் நீதிமன்ற அலுவலகம் உள்ளது. அங்கு தான் Xerox Machine உள்ளது. எனக்கு எதுவும் வேறு ஏதாவது பணி நியமிக்க வேண்டும் என்றால் office order போடவேண்டும். சம்பவ நேரத்தில் office order எதுவும் போடவில்லை. ஆனால் xerox சம்பந்தமான பதிவேடுகளை எழுதிக்கொண்டிருந்தேன்.

எனக்கு திறந்தவெளி நீதிமன்றத்தில் பணி எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. நான் கோப்புகளை வாங்குவதற்கு திறந்தவெளி நீதிமன்றத்திற்கு வந்தேன். அதுபோன்று கோப்புகளை பெறவேண்டும் என்றால் grant பெற்றுக்கொண்டு வந்து சம்பந்தப்பட்ட பெஞ்ச் கிளார்க்கிடம் வந்து வழக்கு கோப்பினை பெறவந்தேன். வழக்கு கோப்பினை பெற்றுக்கொண்டு தான் grant வாங்க வேண்டும். நான் திறந்தவெளி நீதிமன்றத்திற்கு எந்த வழக்கு கோப்பினை வாங்க வந்தேன் என்பது எனக்கு நினைவில் இல்லை என்றால் நான் Register தான் எழுதிக்கொண்டிருந்தேன்.

சம்பவ காலத்தில் அசா.1 பெஞ்ச் கிளார் என்பதால் அவருக்கு கீழ் நான் பணியாற்றி வந்தமையால் அசா.1க்கு ஆதரவாக எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி எந்த தருணத்திலும் அசா.1ஐ திட்டவில்லை என்றும், அசா.1ம் முத்தம் கொடுக்க வேண்டும் என்று அசா.1ன் அருகில் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.